சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதிகுட்பட்ட நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் 2026ம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா,எம்.பி. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் தயாநிதி மாறன்,எம்.பி, நா.எழிலன் எம்.எல்.ஏ., மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ்.கலை, ஜெ.எஸ். அகஸ்டின் பாபு, தொகுதி பார்வையாளர் வே.கௌதமன், பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், ஆயிரம்விளக்கு தொகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கோவையில் த.வெ.க கட்சியில் இருந்து விலகிய வைஷ்ணவி தலைமையில் 25க்கும் மேற்பட்டோர் முன்னாள் அமைச்சர், கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ் காந்தி, பகுதிச் செயலாளர் ஜே.எஸ்.சரத் உள்பட பலர் உள்ளனர்.

செங்கம் நகரில் கராத்தே பயிற்சிக்குச் சென்ற 16 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை:

பா.ஜ.க. இளைஞரணி நிர்வாகி மீது போக்சோ உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் வழக்கு!

பா.ஜ.க. இளைஞரணி நிர்வாகி எழில்இசையை கைது செய்து காவல்துறை விசாரணை!

செங்கம், மே 23-

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் நகரில் கராத்தே பயிற்சிக்கு சென்ற 16 வயது பள்ளி மாணவியை, பாலியல் வன்கொடுமை செய்த பா.ஜ.க. இளைஞரணி நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் நகரம் திருவள்ளுவர் நகர் பகுதியில் பா.ஜ.க.கிளை தலைவராகவும் நகர இளைஞரணி துணைத் தலைவராகவும் பதவி வகித்து வரும் சேட்டு என்பவரின் மகன் எழில் இசை, செங்கம் சுற்றுவட்டார பகுதிகளில் தனியார் பள்ளிகளில் கராத்தே பயிற்சி அளித்து வந்தார். மேலும் செங்கம் நகர பகுதிகளிலும் கராத்தே பயிற்சி பள்ளி நடத்தி வந்தார்.

இந்த நிலையில் மேல் புழுதியூர் ஊராட்சி சந்தகவுண்டன் புதூர் பகுதியைச் சேர்ந்த ஏழுமலை என்பவரின் 16 வயது மகள், பாஜக இளைஞரணி நிர்வாகி எழில் நடத்தி வரும் கராத்தே பள்ளியில் சுமார் 8 ஆண்டுகளாக பயிற்சி பெற்று வந்தார். பயிற்சி பெற்று வந்த மாணவியை பாஜக நிர்வாகி கராத்தே மாஸ்டர் பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில், மாணவி கர்ப்பமானார். இதையடுத்து, திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சிறுமி அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், அவரை பரிசோதித்த மருத்துவர்கள், செங்கம் அனைத்து மகளிர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இந்நிலையில், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு அந்த மாணவிக்கு குழந்தை பிறந்தது. அந்த குழந்தை அரசு உதவி பெறும் தனியார் தொண்டு நிறுவனத்தில் பராமரிக்க அனுமதிக்கப்பட்ட நிலையில், மாணவி தனது பெற்றோருடன் இருந்து வந்தார்.

இந்நிலையில், டி.என்.ஏ. ஆய்வு செய்த போது பா.ஜ.க. இளைஞரணி நிர்வாகி கராத்தே மாஸ்டர் தான் குழந்தையின் தந்தை என தெரிய வந்தது. இதையடுத்து, சிறுமியிடம் அத்து மீறிய பா.ஜ.க. இளைஞரணி நிர்வாக எழில் இசை கைது செய்யப்பட்டார். அவர் மீது, போக்சோ உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறது.

மூலிகை அழகுசாதனப் பொருட்கள் –

தோல் பராமரிப்புப் பொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி!

சென்னை, மே 23 -

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், மூலிகை அழகுசாதனப் பொருட்கள் & தோல் பராமரிப்புப் பொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி வரும் 28.05.2025 முதல் 30.05.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் தேங்காய் எண்ணெய் சோப்பு, மூலிகை சோப்பு, ஆயுர்வேத சோப்பு, முடி வளரும் எண்ணெய், முடி வளரும் ஷாம்பு, ஃபேஸ் வாஷ் ஜெல், கை கழுவும் திரவம் மற்றும் பயிற்சி வழிமுறைகளுடன் சுயமாக தொழில் தொடங்குவதற்கு இந்த பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ளவர்கள் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சியாளர்கள் விண்ணப்பிக்கலாம். சென்னையில் பங்குபெறும் ஆண், பெண் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600032. 8668102600.

கோவி.லெனின் பங்கேற்பு

மயிலை மேற்குப் பகுதி பி.எல்.ஏ. 2 - பி.எல்.சி. கூட்டங்கள்!

பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிவிப்பு

சென்னை, மே 23 -

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்குப் பகுதி பி.எல்.ஏ. 2, பி.எல்.சி. - சந்திப்பு கூட்டங்கள் நடைபெறுகிறது. இது குறித்து பகுதிச் செயலாளர் நந்தகம் கி.மதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எனது முன்னிலையில் அந்தந்த வட்டச் செயலாளர்கள் தலைமையில் BLA 2 & BLC சந்திப்பு கூட்டம் கீழ் கண்ட தேதிகளில் நடைபெற உள்ள வட்டங்களின் விவரங்கள் இக்கூட்டத்தில் மயிலை தொகுதி பொறுப்பாளர் கோ.வி.லெனின் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

மேலும் பின்வரும் நாட்களில் நடைபெற உள்ள BLA2 & BLC சந்திப்பு கூட்ட விவரங்கள் :

வட்ட செயலாளர் டி.ராஜவேலு - 121 வது வட்டம் - 25.05.2025 - காலை 10:00 மணி

வட்டச் செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி - 121 (அ) வட்டம் - 25.05.2025 - காலை 11:00 மணி

வட்ட செயலாளர் அ.நாகராஜன் - 122 (அ)வட்டம் - 26.05.2025 - மாலை 6:00 மணி

வட்ட செயலாளர் மூ ராஜேந்திரன் - 123 (அ) வட்டம் - 27.05.2025 - மாலை 6:00 மணி

எனவே வட்ட கழக நிர்வாகிகள், BLA2 மற்றும் BLC அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

மின்னணு முறையில் சந்தைப்படுத்தல் குறித்த இரண்டு நாள் பயிற்சி!

சென்னை, மே 23 -

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், "தொழில்முனைவோர் மற்றும் சிறு வணிகங்களுக்கான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பட்டறை" பயிற்சி வரும் 28.05.2025 முதல் 29.05.2025 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது. இப்பயிற்சிப் பட்டறையின் முக்கிய மதிப்பு முன்மொழிவுகள்:

- வணிக சந்தைப்படுத்துதலின் அடிப்படைகள்
- வளர்ச்சிக்கான அலகு பொருளாதாரம்
- முக்கிய அளவீடுகளைப் புரிந்துகொள்ளுதல்
- அதிக மாற்றும் சந்தைப்படுத்துதல் புனலை உருவாக்குதல்
- டிஜிட்டல் சந்தைப்படுத்துதலின் இரகசியங்கள்
- வெற்றிக்கான தந்திரங்கள் மற்றும் கருவிகள்
- குறிப்புக்கான நிகழ்வு ஆய்வுகள்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 032, கைபேசி எண்கள்: 9543773337 - 9360221280.

முன்பதிவு அவசியம்: அரசு சான்றிதழ் வழங்கப்படும் என்று அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தென்காசி வடக்கு மாவட்ட அவைத் தலைவர் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட துணைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்கான தேர்தல் வேட்புமனுத் தாக்கல்!

தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் தென்காசி வடக்கு மாவட்டக் கழகத் தேர்தலில், மாவட்ட அவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட கோ. பத்மநாபன் அவர்கள் மறைவெய்திய காரணத்தாலும்; திருப்பத்தூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.எம். ஷபீர் அஹமத் அவர்கள் ஆம்பூர் கிழக்கு நகர பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும், திருப்பத்தூர் மாவட்ட மறு சீரமைக்கப்பட்டதால் நிரப்பப்படாமல் உள்ள துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, மே 26 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் அந்தந்த மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்/ஒன்றிய/நகர செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 22.5.2025

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு ஒன்றியம் ராமசமுத்திரம் ஊராட்சி கொத்தகண்டிகை கிராமத்தில் திருத்தணி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை திறப்பு விழா நடைபெற்றது இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து விற்பனையை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஜி. இரவீந்திர, ஏகாம்பரம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் உள்ளனர்

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணை தீவிரம்:

வழக்கில் தொடர்புடைய ரமேஷ் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் ஆஜர்!

விசாரணைக்கு ஆஜரான ரமேஷ் – உயிரிழந்த கனகராஜின் உறவினர்!

கோவை, மே 23-

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில், கார் விபத்தில் உயிரிழந்த கனகராஜின் சகோதரர் ரமேஷ், விசாரணைக்காக சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் ஆஜரானார்.

நீலகிரி மாவட்டம் கொடநாட்டில், மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலிதாவுக்கு சொந்தமான பங்களாவில், கடந்த 2017ம் ஆண்டு நுழைந்த கும்பல், பாதுகாப்புப் பணியில் இருந்த காவலாளி ஓம் பகதூரை கொலை செய்து விட்டு சொத்து ஆவணங்களை கொள்ளையடித்துச் சென்றது.

இந்த சம்பவத்தில் விசாரணை வளையத்திற்குள் கொண்டு வரப்பட்ட ஜெயலலிதாவின் கார் ஓட்டுநர் கனகராஜ், மர்மமான முறையில் விபத்தில் உயிரிழந்தார். இந்த வழக்கில் தடயங்களை அழித்ததாக கனகராஜின் உறவினர்களான தனபால், ரமேஷ் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஜாமினில் வெளியே உள்ளனர்.

இந்த நிலையில் விசாரணைக்கு ஆஜராக கனகராஜின் உறவினர் ரமேஷுக்கு சி.பி.சி.ஐ.டி. போலீசார் சம்மன் அனுப்பிய நிலையில், அவர் விசாரணைக்காக சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் ஆஜராகியுள்ளார்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

அமைச்சர் அர.சக்கரபாணி – பிரகாஷ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, மே.23-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மற்றும் சட்டமன்றத் தேர்தல் 2026 வேப்பனபள்ளி, ஒசூர், தனி சட்டமன்ற தொகுதி வாரியான கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ் தலைமையில் சூளகிரியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும், சட்டமன்ற தேர்தல் மண்டல பொறுப்பாளருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி, சட்டமன்ற தேர்தல் தொடர்பாக கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தை சேர்ந்த வேப்பனபள்ளி,

ஒசூர், தளி சட்டமன்ற தொகுதிகளை சேர்ந்த நிர்வாகிகள் வாக்காளர்களை வீடு, வீடாக சென்று நேரில் சந்தித்து கடந்த நான்காண்டுகளாக கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் செய்யப்பட்ட மக்கள் நலத் திட்டங்களான மகளிர் உரிமைத் தொகை, மகளிர் அரசு பேருந்தில் கட்டணம் இல்லா பேருந்து பயணம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம்,கல்லூரி மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம் உள்ளிட்ட மக்கள் நலத் திட்டங்களை எடுத்துக் கூறி தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை விளக்க வேண்டும் எனவும், நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலில் ஏழாவது முறையாக திமுக ஆட்சியை அமைக்க அனைவரும் அயராது பாடுபட வேண்டும். கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்பதற்கு நீங்கள் அனைவரும் அயராது உழைக்க வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும், ஒசூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் அரியப்பன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் வடிவேல், மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி , புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன், ஒசூர் மாநகர துணை மேயர் ஆனந்தைய்யா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீராரெட்டி, எல்லோரா மணி, கிரீஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன் , சீனிவாசன்,

முனிராஜ், அப்துல் கலாம், தனலட்சுமி, அருணா பூசன், ஒன்றிய செயலாளர்கள் பாக்கியராஜ், நாகேஷ், ரகுநாத், கருணாகரன், ஸ்ரீனிவாசலு ரெட்டி, திவாகர், கஜேந்திரமூர்த்தி, சின்ராஜ், தணிகாசலம், ஸ்ரீதர், பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன், தஸ்தகீர் , ஒசூர் மாநகர அவைத்தலைவர் செந்தில்குமார், கோபாலகிருஷ்ணன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் , தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி மாநிலம் பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்கான தேர்தல் வேட்புமனுத் தாக்கல்!

தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் புதுச்சேரி மாநிலக் கழகத் தேர்தலில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அ. சோமு (எ) சோமசுந்தரம் அவர்கள் மறைவெய்திய காரணத்தால் அந்த பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, மே 26 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**

வேட்புமனுக்களை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் புதுச்சேரி மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதி செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும். வேட்பு மனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 22.5.2025

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்ற தொகுதி இளைஞர் அணி சார்பில் போரூர், வார்டு 151ல் பாக வாரியாக இளைஞர்களுக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.சங்கர்கணேஷ் எம்.சி.,செ.ரவி, ஆகியோர் தலைமையில் வலைதள பயிற்சிக் கூட்டத்தில் காரம்பாக்கம் க. கணபதி எம்எல்ஏ, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்எல்ஏ சிறப்புரையாற்றினர். நிகழ்வில் ஊடகவியாளர் இந்திரகுமார் தேரடி, சமூக வலைதளப் பயிற்சியாளர் விக்னேஷ் ஆனந்த் ஆகியோர் இளைஞர்களுக்கு சமூக வலைதள பயிற்சியளித்தனர். இதில் நொளம்பூர் வே.ராஜன், ஒன்றியச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, இராமாபுரம் வ. செல்வகுமார்,ஆர். கிருஷ்ணகுமார், ஜெ.இ.பாண்டியன், கா.வீ.தியாகராஜன், மாமன்ற உறுப்பினர் எம்.இ.ஸ்டாலின், வட்டக் கழக செயலாளர்கள் அண்ணதாசன், ஜெயரத்தினம், ப.ஆலன், எம். ரூபன், எஸ்.ஜி. மாதவன், எஸ்.ரமேஷ்ராஜ், சி. சுந்தர், அ.மோசஸ், ஜெ. பாஸ்கரன், தி. சார்லஸ், அ. ராதா செல்வம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.